**தலைப்பு 331 - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 331 - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 ஆந்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2023 மே 31 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2023 யூன் 15 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய

வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(ஈ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரும் கணக்கீட்டு உத்தியொகத்தரும் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய வருடத்துடன் இணங்கியுள்ளது.

(ஆ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக என்னால் செய்யப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வைப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களுக்கு உரிய வைப்புக் கொடுப்பனவு மற்றும் மீதி கணக்கிடப்பட்டபோது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 05 பொது வைப்புக் கணக்குகளின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீதிகள் மற்றும் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தலைமை அலுவலகம் மற்றும் மாவட்ட அலுவலகங்களின் அட்டவணைகளின் பிரகாரம் மீதிகள் என்பவற்றுக்கிடையே ரூபா 124,709,327 ஆன வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது. | அரச கணக்குகள் திணைக்களத்திற்கு மீதி கள் இணக்க அறிக்கை சமப்படுத்தப்பட்ட சமர்ப்பிக்கப்பட்டபோது இவ்வேறுபாடு அடையாளங் காணப்பட்ட பின்னர் திணைக்களத்தின் புத்தகங்களில் சீராக்கப்படுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | இவ்வேறுபாடு அடையாளங் காணப்பட்டு புத்தகங்களில் சீராக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | பொது வைப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்பட்ட 05 பொருட்களின் மொத்த பெறுமதி ரூபா 2,392,568,462 ஆனது தனிப்பட்ட மீதிகள் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. | ரூபா 2,392,568,462 மீதி சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தனிப்பட்ட நிலுவைகளின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இந்தத் திணைக்களத்தின் கீழ் ஒதுக்கங்கள் அறிக்கையிடப்படும்போது இம்மீதி திறைசேரிக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. | இம்மீதி தனிப்பட்ட நிலுவைகளின் பட்டியலில் உள்ளடக்கப்படு வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## (ஆ) ஆதனம் பொறி மற்றும் உபகரணம்

ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் கணக்கிடப்பட்டபோது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2022 சனவரி 01 இல் ரூபா 900,000 பெறுமதியான கலகம சமுர்த்தி வங்கி காணி ரூபா 2,500,000 இற்கு மதிப்பிடப்பட்டதன் மூலம் சேர்க்கப்பட்ட ரூபா 1,600,000 ஆன பெறுமதி நிதிக்கூற்றுக்களில் நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் ஒதுக்கங்களின் கீழ் குறைவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2023 எப்ரல் மாதம் அப்பெறுமதி கணக்கிடப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கம் செய்யப்பட்டு சொத்துக்கள் மீதி திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | ரூபா 5,650,000 பெறுமதியான ஹிபன்கந்த கல்கந்த காணி சுகாதார நிலையத்திற்காக கரன்தெனிய பிரதேச செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் காணிகளின் கீழ் தொடர்ந்தும் குறிப்பிடப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டின் மே மாத கணக்குப் பொழிப்பில் காணியின் கீழ் காட்டப்பட்டுள்ள இம்மீதி நீக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கம் செய்யப்பட்டு சொத்துக்கள் மீதி திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iii) | மாத்தறை உத்தியோகபூர்வ இல்லம் அமைந்துள்ள காணியின் பெறுமதி ரூபா 7,749,000 ஆன தொகை கட்டிடங்களின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | 2022 திசெம்பர் 31 இல் காணிகளின் கீழ் காட்டப்பட்டிருந்த மாத்தறையின் உத்தியோகபூர்வ இல்லம் அமைந்திருந்த காணியின் பெறுமதி ரூபா 7,749,000 ஆன தொகை 2023 ஏப்ரல் மாத கணக்குப் பொழிப்பின் மூலம் உத்தியோகபூர்வ இல்லங்களின் கீழ் மாற்றப்பட்டு சரி செய்யப்பட்டுள்ளது. | காணியின் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| (iv) | செலவு விடய இலக்கம் 1205 இன் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 115,000 ஆன மின்சார உபகரணங்களின் (Microwave Oven) பெறுமதி ரூபா 1,150,000 ஆக மின்சார உபகரணங்களின் குறிப்பிடப்பட்டுள்ளது. | மின்சார உபகரணங்களின் பெறுமதி 2022 திசெம்பர் 31 இல் கணக்கிடப்பட்டபோது ஏற்பட்ட இத்தவறு 2023 ஏப்ரல் மாத கணக்குப் பொழிப்பின் மூலம் திருத்தப்பட்டள்ளது. | 2023 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் தேவையான சீராக்கம் செய்யப்பட்டு சொத்துக்கள் மீதி திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 அரச உத்தியோகத்தர்களின் முற்பணக்கணக்கு தொடர்பான இணக்கக்கூற்று

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் 100 ஊழியர்களின் 01 முதல் 05 வருடத்திற்கு மேற்பட்ட கடன் நிலுவைத் தொகை ரூபா 2,467,073 ஆக இருந்தது. இந்தக் கடன் மீதியில், 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட நிலுவை ரூபா 302,233 உம் 4 மற்றும் 5 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 922,180 உம் 3-4 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட கடன் நிலுவைத் தொகை ரூபா 321,336 உம் 1-3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட நிலுவைத் தொகை ரூபா 921,324 உம் ஆகக் காணப்பட்டது. | இந்த அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மீதியில் ரூபா 742,759 ஆன தொகையொன்று 2023 ஜனவரி 31 அன்று வசூலிக்கப்பட்டது. மீதமுள்ள கடன் நிலுவைத் தொகையும் வசூலிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | வசூலிக்கப்பட முடியாத கடன் நிலுவைகள் தொடர்பாக தாபனக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

## 2.2 எல்லைகள் பின்பற்றப்படாமை

அரசின் முற்பண நடவடிக்கைகளுக்காக பாராளுமன்றத்தினால் ஒதுக்கப்பட்டுள்ள எல்லைகளை அடையாமை தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 ஆம் ஆண்டிற்கான பாதீட்டு மதிப்பீடுகளின்படி, குறைந்தபட்ச பெறுவனவு எல்லை ரூபா 280,000,000 ஆக இருந்ததுடன் உண்மையாக பெறப்பட்ட தொகை ரூபா 222,888,467 ஆக இருந்தமையால் பெறுவனவுகளில் குறைந்தபட்ச எல்லை எட்டப்படாத பெறுமதி ரூபா 57,111,533 ஆக இருந்தது. | முற்பண பி கணக்கின் எல்லைகளை தீர்மானிக்கும் போது குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு தொடர்புடைய எல்லைகள் முடிவு செய்யப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் எல்லைகளை அடைய முடியாமல் போனதற்கு முக்கிய காரணம், திறைசேரி சுற்றறிக்கைகளின்படி கடன்களை வழங்குவதில் உள்ள எல்லைகள் மற்றும் கொடுப்பனவுகளுக்கான நிதி கிடைக்காமை ஆகும். | முற்பண எல்லைகளை திருத்தும்போது அங்கீகாரம் பெறப்பட்டு திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) செலவின விடய இலக்கம் 331-1-1-1202 மற்றும் 331-2-2-1402 இன் கீழ் ஏனைய நிறுவனங்களுக்கு செலுத்த வேண்டிய மொத்தம் ரூபா 947,730 ஆனது பொறுப்புக்கள் பதிவேட்டில் உள்ளடக்கப்படவில்லை. | பொறுப்புக்கள் பதியப்பட்டபோது எற்பட்ட தவறாகும். இப பொறுப்புக்களை பதிவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்கள் சரியாக இனங்காணப்பட்டு பதிவு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 3,045,956 ஆன கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் பெறுமதி செலவுப் பேரேட்டில் முன்னைய ஆண்டு கணக்கிடப்பட்ட கடப்பாடுகளின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை. | செலவுப் பேரேட்டில் உள்ள திருத்தங்கள் தொடர்பான குறிப்புகளைப் பயன்படுத்தி, முந்தைய ஆண்டின் கணக்கிடப்பட்ட கடப்பாடுகளின் கீழான அவதானிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட செலவினங்களைப் பதிவுசெய்து திரத்தம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | முந்தைய ஆண்ல் கணக்கிடப்பட்ட கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்கள் பதிவேட்டில் குறிப்பிடப்பட வேண்டும். |
| (இ) | 2017 ஏப்ரல் 27 ஆம் திகதிய 255/2017 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கைக்கு முரணாக, திணைக்கள அதிகாரிகளுக்கு செலுத்த வேண்டிய பொறுப்புக்களின் பெறுமதி ரூபா 125,521 பொறுப்புகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | முந்தைய ஆண்டின் பிற கொடுப்பனவுகளுக்கான செலவுகள் நடப்பாண்டின் செலவின விடயத்திற்கான ஒதுக்கங்களில் செய்வதற்கு தேவையான அதிகாரத்தைப் பெறுவதன் அடிப்படையில் இக்கொடுப்பனவகள் பொறுப்புகளாக உள்ளடக்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.4 கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய உறுதிப்படுத்தல்

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய கணக்கீட்டு உத்தியோகத்தரினால் கீழுள்ள விடயங்கள் தொடர்பாக உறுதிப்படுத்தல் செய்ய வேண்டி இருந்தபோதிலும் அதன்படி செய்யப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டுக்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரித்து பேணப்படுவதாக கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் ஆக்கபூர்வத் தன்மை காலத்திற்குக் காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை பயன்தரும் வகையில் கொண்டு செல்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்பட வேணடிய போதிலும், அம்மீளாய்வுகள் எழுத்து மூலமாக | திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாடு தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றின் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதுடன் இத்தகவல் எழுத்து மூலம் காட்டப்படவில்லை. | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகார சட்டத்தின் 38 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

செய்யப்பட்டு அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறான மீளாய்வொன்று செய்யப்பட்டதற்கான கூற்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வின்போது அஅவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்களின் எற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே விவரமாக காட்டப்படுகின்றன.

| | அவதானிப்புக்கள் சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் | | | | |
| (i) | நி.பி 135 மற்றும் 381(i) | - | 03 பயிற்சி நிலையங்கள் திறைசேரியின் அங்கீகாரமின்றி வங்கி நடைமுறைக் கணக்குகளைப் பேணி வருகின்றன. | பயிற்சி நிலையங்களுக்காக திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தின் அங்கீகாரத்தின் கீழ் புதிய வங்கிக் கணக்குகள் திறக்கப்படுவதற்கான சகல ஆவணங்களும் தற்போது திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ii) | நி.பி 206(3) மற்றும் (1) | 1,388,691,509 | வைப்பொன்றின் மூலம் பணம் செலுத்தும்போது, ஒவ்வொரு உறுதிச்சீட்டும் இரண்டு அதிகாரிகளால் சான்றுப்படுத்தப்பட வேண்டிய போதிலும், 2022 நவம்பர், திசெம்பர் | பொது வைப்புத் தொகை செலுத்தப்படும் போதெல்லாம் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு அதிகாரிகளின் கையொப்பங்களைப் பெறாமல் பணம் செலுத்துவதற்கான உறுதிச்சீட்டுக்களை சமர்ப்பிக்க வேண்டாம் | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | மாதங்களுக்காக ஒரு அதிகாரியால் 50 உறுதிச்சீட்டுக்கள் சான்றுப்படுத்தப் பட்டிருந்தன. | என்று விடய அதிகாரிகளுக்குத் தெரிவிக்கப்பட்டு அந்த தவறு ஏற்படாதவாறு உள்ளக கட்டுப்பாடு முறைப்படுத்தப் பட்டுள்ளது. | |
| (ஆ) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | - | 2019 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வாகனக் கணக்கெடுப்பின் பிரகாரம் சேவையில் இருந்து நீக்கப்பட்ட, பழுதுபார்க்கப்பட்டு மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படக் கூடிய 24 வாகனங்களை பழுதுபாாப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. | 2019 கணக்கெடுப்பில் அடையாளம் காணப்பட்ட வாகனங்களில் இருந்து, பொருளாதாரத் திறனின் அடிப்படையில் பழுதுபார்க்கக்கூடிய மற்றும் பயன்படுத்தக்கூடிய வாகனங்களை சரிசெய்ய இப்போது திட்டமிடப்பட்டுள்ளது, மேலும் பயனற்ற பிற வாகனங்கள் 2023 ஜூலை 31 இற்கு முன்னர் அகற்றப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (இ) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | - | சுற்றறிக்கை பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்படாததுடன் , ஒட்டுமொத்த பதவியணிக்கான பதவியணி ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | மூலதனச் செலவினங்களின் வரம்பு மற்றும் போதிய ஒதுக்கீடு இல்லாத காரணத்தால் 2022 ஆம் ஆண்டில் இந்த சுற்றறிக்கை அறிவுறுத்தல்களை நடைமுறைப்படுத்த முடியவில்லை. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய அரச நிதிச் சுற்றறிக்கை இலக்கம் 02/2020 இன் 7.4 ஆம் பந்தி மற்றும் 2015 யூன் 24 ஆந் திகதிய 243/2015 | - | ஆரம்பிக்கப்பட்ட ஒவ்வொரு வகை வைப்புக் கணக்கு தொகுதிகளுக்கான ஆண்டிறுதி நிலுவைகள், சிகாஸ் திட்டத்தின் கீழ் பெறப்பட்ட தனிப்பட்ட நிலுவைகளின் | வைப்பு மீதிகள் இணக்கப்பட்டபோது அடையாளம் காணப்பட்ட சில வேறுபாடுகளைத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்ததால் | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கை | பட்டியலுடன் இணைக்கப்பட்டு வைப்புக் கணக்கு நடவடிக்கைகளைப் பின்தொடரவும் பகுப்பாய்வு செய்வதற்கும் படிவங்கள் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்டு நிதியாண்டின் முடிவில் அடுதது வரும் நிதியாண்டின் பெப்ரவரி 28 ஆம் திகதிக்கு முன்னர் அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட வேண்டிய போதிலும் சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வைப்புக் கணக்கு வகைகளின் இணக்க அறிக்கைகளை 28 பெப்ரவரி 28 அன்று சமர்ப்பிக்க முடியவில்லை, |

## 2.6 வைப்பு மீதிகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஓகஸ்ட், செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் ஆகிய மாதங்களில் மானியம் வழங்குவதற்காக முன்னாள் சமுர்த்தி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தினால் சமுர்த்தி அதிகாரசபையிடமிருந்து பெறப்பட்ட ரூபா 2,374 மில்லியன் ஆன தொகையானது 8 வருடங்கள் கடந்து விட்ட போதிலும் தீரக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | இந்த நிலுவைத்தொகையை தீர்ப்பதற்காக திறைசேரியிடம் கோரிக்கைகள் முன்வைக்கப்பட்ட போதிலும், இதுவரை தொகையை தீர்ப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை. தற்போது எஞ்சிய தொகையை தீர்ப்பதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | இத்தொகையை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 யூன் 01 முதல் 2022 திசெம்பர் 30 வரையான காலப்பகுதிக்கான மொத்தம் ரூபா 3,221,847 ஆன அரச ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்களிப்புத் தொகை அந்நிதியத்திற்கு அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது காலி மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தின் வைப்புக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | 2023 பெப்ரவரி இல் இந்தப் பணம் தொடர்பாக செயல்படுத்தப்பட வேண்டிய முறைமை குறித்த அறிவுறுத்தல் பெறப்பட்டுள்ளதால் இந்தக் கொடுப்பனவுகளுக்கான கட்டு நிதியை பெற்ற பிறகு, சம்பந்தப்பட்ட தொகையை ஊழியர் சேமலாப நிதியத்திற்கு அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பங்களிப்புத் தொகை இந்நிதியத்திற்கு விரைவில் அனுப்பப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | உலக வங்கி உதவியின் கீழ் 2022 மே, ஜூன், ஜூலை மாதங்களில் சமுர்த்தி/முதியோர்/ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக நோயாளிகளுக்கான காத்திருப்புப் பட்டியல் பயனாளிகளுக்குப் பணம் செலுத்துவதற்காக சமுர்த்தி வங்கிக்கு 2022 மே - ஆகஸ்ட் காலப்பகுதியில் செலவு வைக்கப்பட்டுள்ள ரூபா 39,619,307,119 ஆன தொகையில் மானியம் செலுத்திய பிறகு, மீதமுள்ள ரூபா 90,318,300 ஆன தொகை தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு 2023 ஏப்ரல் 11 அன்று திருப்பி அனுப்பப்பட்டிருந்தது. | அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நிலுவை தொகை உட்பட ரூபா 93,011,970 ஆன தொகையொன்று 2023 ஏப்ரல் 11 அன்று பணப்பாளர் நாயகம், தேசிய திட்டமிடல் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டு வைப்பு கணக்கின் மீதித் தொகை தீர்க்கப்பட்டுள்ளது. | மானியம் செலுத்திய பின்னர் மீதமுள்ள உதவித் தொகையை காலதாமதமின்றி திறைசேரிக்கு அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | 2020/21 ஆம் ஆண்டுகளில் கோவிட் மானியங்களை வழங்குவதற்காக, திணைக்களத்தின் கீழ் உள்ள நிதியங்களின் நிலையான வைப்புக்கள் பிணையாக வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன் பணம் சமுர்த்தி சமூக வங்கிக்கு வழங்கப்பட்டிருந்தது. பயனாளிகளுக்கு மானியம் செலுத்திய பிறகு மீதமுள்ள ரூபா 177,731,499 ஆன | 2021 ஆம் ஆண்டில் பெறப்பட்ட கடனுக்காக இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கியில் செலுத்த வேண்டிய கடன் தொகையின் வட்டித் தொகையின் ஒரு பகுதியை செலுத்துவதற்கு இந்த மீதியைப் பயன்படுத்த முடியும் என்பதால், அதற்குத் தேவையான கட்டுநிதியை திறைசேரியிடமிருந்து பெற்று இந்த நிலுவை | எஞ்சிய தொகை தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் தேதி வரை நிதியத்திற்கு விடுவிக்கப்படாமல் பொது வைப்புக் கணக்கில் சேமிக்கப்பட்டிருந்தது. | தொகையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | 2019 மே முதல் 2021 ஜுன் வரையிலான காலக்கட்டத்தில், வழங்கப்பட்ட ஆனால் கொடுப்பனவிற்காக சமர்ப்பிக்கப்படாத மொத்தம் ரூபா 654,589 ஆன 49 காசோலைகள் நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாது பொது வைப்புக் கணக்கில் சேமிக்கப்பட்டிருந்தன. | பொது வைப்புக் கணக்கில் காணப்பட்ட வழங்கப்பட்டும் ஆனால் வெளியிடப்படாத ரூபா 654,589 நிலுவைக்கான வருமானத்தில் அந்தக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதற்காக இதுவரை சமர்ப்பிக்கப்படாததால் இந்த மீதி அரச வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | அரச வருமானத்திற்கு செலவு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.7 வங்கிக் கணக்குச் செயற்பாடு

வங்கிக் கணக்குச் செயற்பாடு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவு கணக்காய்வு பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்ட குறைபாடுககககள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஊழியர் கடன் சுழற்சி கணக்கு தொடர்பான 2022 திசெம்பர் வங்கி இணக்கம் பரீட்சிக்கப்பட்டபோது 04 வருடங்கள் முதல் 8 வருடங்கள் வரையான காலப்பகுதியில் வைப்புச் செய்யப்பட்டு ஆனால் வசூலிக்கப்படாத ரூபா 2,668,654 மதிப்புள்ள 84 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | அவதானிப்பில் சுட்டிக்காட்டப்பட்ட நிலுவைகள், திணைக்களம் ஆரம்பிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் உள்ள கணக்கு என்பதுடன் சீராக்கும்போது ஏற்பட்ட தவறு என அடையாளம் காணப்பட்டுள்ளதுடன், அதை சரிபார்த்து தகவல்களைப் பெறுவதற்கு காசோலைகளை வழங்கிய நிறுவனங்களுக்கு கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அந்த நிறுவனங்களிடம் இருந்து | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தகவல்களைப் பெற்ற பிறகு, முறையான கணக்கியல் செயல்முறைகளைப் பின்பற்றி திருத்தங்கள் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 தூர நோக்கும் செயற்பணியும்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) வறுமையை ஒழிக்கும் அடிப்படை நோக்கத்துடன் குடும்ப அலகு அடிப்படையிலான அபிவிருத்தி செயற்திட்டங்களை பயன்படுத்துவதன் மூலம், வருமானம் மற்றும் சமூக நிலைமைகளை அதிகரிப்பதன் மூலம் வறுமையை ஒழிப்பதற்கும், இளைஞர் யுவதிகளை நாட்டின் அபிவிருத்தி செயன்முறை மற்றும் நிர்வாகத்திற்கு நேரடியாக பங்களிப்புச் செய்வதற்கும் சமுர்த்தி பிரச்சாரம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிகள் தொடர்பாக, அரசாங்கத்தினால் வருடாந்தம் பணம் செலவிடப்பட்டு சமுர்த்தி மானியங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் போன்ற பல்வேறு அபிவிருத்தி திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. 2019 ஆம் வருடத்திலிருந்து 2022 ஆம் வருடம் வரையிலான காலப்பகுதியில் அரசினால் சமுர்த்தியாளர்களை | 2019 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில், அரசாங்கத்தினால் சமுர்த்தியாளர்களை வலுப்படுத்துவதற்கான பல்வேறு சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ரூபா 1,260 மில்லியன் செலவிடப்பட்டிருந்து. | அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளும்போது வலுப்படுத்துவது தொடர்பான குறிப்பிட்ட இலக்கொன்று இனங்காணப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வலுப்படுத்துவதற்கான பல்வேறு சமுர்த்தி அபிவிருத்தி திட்டங்களுக்கு ரூபா 1,260 மில்லியன் செலவிடப்பட்டிருந்தும் வலுப்படுத்துதல் தொடர்பான குறிப்பிட்ட இலக்குகள் எதுவும் அடையாளம் காணப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 1995 ஆம் வருடத்தில் சமுர்த்தியாளர்களாக அடையாளம் காணப்பட்ட 312,307 பேர் 2023 ஆம் ஆண்டளவில் 29 ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும் வலுப்படுத்தப்படாமல் தொடர்ந்தும் மானியங்களைப் பெற்று வருகின்றனர். | சமுர்த்தி மானியம் பெறும் மக்களில் முதியோர்/ ஊனமுற்றோர்/ நாட்பட்ட நோய்கள் போன்றவற்றால் பாதிக்கப்பட்ட ஏராளமான வலுப்படுத்தப்படாத குடும்பங்கள் இதில் உள்ளடங்குகின்றன. | அடிப்படை நோக்கத்தின்படி செய்ய வேண்டிய பணிகள் மற்றும் செயற்பாடுகளின் பிரகாரம் செயற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | திணைக்களத்தினால் ஆண்டுதோறும் வலுப்படுத்தப்பட்டு வருகின்ற சமுர்த்தியாளர்களாக 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் முறையே 1,958, 18,629 மற்றும் 21,189 பயனாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஆண்டுதோறும் வலுப்படுத்தப்படுகின்ற பயனாளிகள் தொடர்பாக குறிப்பிட்ட இலக்குகள் கொண்ட திட்டமொன்றுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அதன் பிரகாரம் ஆண்டுதோறும் சமுர்த்தியாளர்களை வலுப்படுத்துவதற்காக அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட செயற்திட்டங்களுடன் ஒப்பிடுகையில், வலுப்படுத்தப்படல் குறைந்தளவு மட்டத்தில் இருந்தது. | நாட்டில் ஏற்பட்டுள்ள கோவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக வலுவூட்டல் நடவடிக்கைகள் மெதுவாக இருந்தாலும், பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளபடி 2022 ஆம் ஆண்டிலிருந்து வலுப்படுத்தப்படல் அதிகரித்துள்ளது. 2023 ஆம் ஆண்டு முதல், ஒரு வருடத்திற்கும் குறைவான வருமானம் ஈட்டுபவர்கள் 01(கிராம அலுவலர் பிரிவுகளில் ) வீதம் 01 பேர் வலுப்படுத்தப்படல் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | குறிப்பிட்ட இலக்கொன்றின் பிரகாரம் வலுப்படுத்தப்படல் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2018 ஆகஸ்ட் 20 ஆம் திகதிய DSD/HO/SW/14/18/04/18 சுற்றறிக்கை மற்றும் 2021 பெப்ரவரி 11 ஆம் திகதிய DSD/HO/SW/14/19/01 - Circular ஆகிய சுற்றறிக்கைகளின் பிரகாரம் சமுர்த்தி மானியங்களுக்கத் தகுதியற்ற திறமையான தொழிலாளர் மற்றும் சிற்பிகள் போன்ற அறிவைப் பயன்படுத்தி வருமானம் ஈட்டும் செயற்திட்டங்களில் ஈடுபட்டுள்ள பயனாளிகளின் சமுர்த்தி மானியங்கள் கிராமப்புற குழுக்களின் பரிந்துரைகளின் பேரில் அகற்றப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் தெரிவுப் பரிசோதனைக்கு எடுக்கப்பட்ட 34 வட்டாரச் செயலகப் பிரிவுகளில் உள்ள 1,112 பயனாளிகளின் சமுர்த்தி மானியம் அகற்றப்படுவதற்கு கிராமக் குழுக்களிடமிருந்து பரிந்துரைகள் எதுவும் வழங்கப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில், வருமானம் ஈட்டும் செயல்முறையின் மூலம் அதிக வருமானம் ஈட்டும் வலுப்படுத்தப்பட்ட குடும்பங்கள் மற்றும் கிராமியக் குழுவால் அடையாளம் காணப்பட்ட கணிசமான தினசரி வருமானம் ஈட்டும் திறன்மிக்க தொழிலாளர்களைக் கொண்ட குடும்பங்கள் போன்ற விடயங்களுக்கான, அதிக வருமானம் உள்ள வலுப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு மானியத்தை நீக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின்படி, வலுப்படுத்தப்பட்ட வர்களை கண்டறிந்து, மானியத்தை நீககுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2022 திசெம்பர் 31 இல் 1,089 சமூக அடிப்படையிலான வங்கிகளில் 4,115,100 உறுப்பினர்களின் மொத்த வைப்புத் தொகை ரூபா 155.1 பில்லியன் ஆக இருந்ததுடன் அதில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையில் காணப்பட்ட நிலுவை ரூபா 68 பில்லியன் மட்டுமே ஆகும். 2022 திசெம்பர் 31 இல் ரூபா 149 பில்லியன் அதிக வட்டி விகிதத்தில் முதலீடு செய்யப்பட்டதுடன் சமுர்த்தியாளர்களின் | சமுர்த்தி வங்கி முறைமையில் கடன்களுக்கான கடன் வட்டி விகிதம் ஏனைய வங்கிகளுடன் ஒப்பிடுகையில் 3.5 மற்றும் 13 சதவீதமாகும். ஏனைய வங்கிகளுடன் ஒப்பிடுகையில் வட்டி விகிதம் குறைவாக இருப்பதே சேமிப்புக்கு 03 சதவீதம் வட்டி வழங்குவதற்கான காரணமாகும். ம். கணக்காய்வு அறிக்கையின்படி, சமுர்த்தி வங்கியின் நோக்கங்கள் மீறப்படவில்லை | சமுர்த்தியாளர்களை வலுவூட்டும் நோக்கில் சமூக அடிப்படையிலான வங்கி முறைமையில் காணப்படும் நிதியை முடிந்தவரை பயன்படுத்த வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சேமிப்புக்காக 03 சதவீதமான குறைந்த அளவிலான வட்டியே வழங்கப்பட்டது. இதன் பிரகாரம் சமுர்த்தியாளர்களை வலுவூட்டும் நோக்கில் சமூக அடிப்படையிலான வங்கி முறையானது ஆரம்பிக்கப்பட்ட போதிலும், தற்காலத்தில் அது சமுர்த்தியாளர்களை வலுவூட்டும் நோக்கத்தில் இருந்து விலகி இலாபத்தை நோக்கியே இயங்கி வருவதையும் மற்றும் இலாபத்தை நோக்கிய செயற்பாடுகளைக் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிந்தது. | என்பதுடன் முழு வங்கி முறையினாலும் வருடாந்தம் 350,000 குடும்பங்களுக்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. மேலும், ஆண்டுதோறும் 50,000 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்களது வருமானத்தை அதிகரித்துள்ளதாகத் தெரிய வந்துள் ஆனால் சமுர்த்தி வங்கிகள் அதிகூடிய இலாபத்திற்காக இயங்குவதில்லை மற்றும் பயனாளிகளுக்கு நுண்கடன் வசதிகளை வழங்குவதே பிரதான நோக்கமாகும். மேலும், கடன் கோரிக்கைகள் குறைந்ததால், வங்கி அமைப்பில் மீதமுள்ள பணம் பயன்படுத்தப்பட்டு, அந்த முதலீடுகளிலிருந்து பெறப்படுகின்ற வட்டி வருமானம் இலாபத்தை அதிகரிப்பதற்கு வழிவகுத்துள்ளது. | |
| (ஊ) | சமூக அடிப்படையிலான வங்கிகளுக்கு மாதாந்தம் அனுப்பப்படுகின்ற சமுர்த்தியாளர்களின் மானியப் பணம் சில சமுர்த்தியாளர்களினால் மாதாந்தம் பெறப்படாமல் நீண்ட காலமாக அவர்களது வங்கிக் கணக்குகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. இது தொடர்பாக நடாத்தப்பட்ட மாதிரி கணக்காய்வின் போது, 10 சமூக அடிப்படையிலான வங்கிகள் 41 பிரிவுகளில் 2,433 பயனாளிகளின் சேமிப்புக் கணக்குகளில் சேமிக்கப்பட்ட தொகை ரூபா 59,951,537 (ரூபா 10,000க்கு மேற்பட்ட மீதி) ஆக இருந்தது. | சமுர்த்தி பயனாளிகளுக்கு மாதாந்தம் பணம் அனுப்பிய பின்னர், நிறுவனம் அதன் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்படுவதுடன் தமது சேமிப்பு கணக்கிற்கு வரவு வைக்கப்பட்ட பணத்தை பெற்றுக் கொள்ளல் தொடர்பான முழுப் பொறுப்பும் அத்தொகை செலவு வைக்கப்பட்ட கணக்கிற்கான உரிமைளாளரையே சாரும். | வங்கிகளில் மானியப் பணம் தேங்கியுள்ளதற்கான காரணங்களை சரிபாரக்கப்பட்டு, பயனாளிகள் வலுப்படுத்தப்ப ட்டிருந்தால் மானியத்தை நீகுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்த்த பூர்த்தி மட்டம் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சமுர்த்தி மின் சந்தைப்படுத்தல் வலையமைப்பை நிறுவுவதற்கும் சமுர்த்தி உற்பத்திகளுக்கான தரச் சான்றிதழ்களை வழங்குவதற்கும் 05 வேலைத்திட்டங்கள் நடாத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டும் ஆனால் அவை நடைமுறைப்படுத்தப்படவில்லை. | இந்த ஆண்டு குறைந்த அளவு ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டதால் இத்திட்டத்தை ஆரம்பிக்க முடியவில்லை. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | கரிம உர உற்பத்தி தொடர்பாக 15 பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டு 06 நிகழ்ச்சித்திட்டங்கள் மட்டுமே நடாத்தப்பட்டதுடன் அதன் பிரகாரம் பௌதீக முன்னேற்றம் 40 சதவீதமாக இருந்தது. | 2022 ஆம் ஆண்டுக்கான அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டத்தின்படி, வாழ்வாதார அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான ஒதுக்கீட்டு வரம்பிற்குள் 22 மாவட்டங்களுக்கான சேதன உரங்களை உற்பத்தி செய்வதற்கு மொத்தம் ரூபா 2.99 மில்லியன் ஒதுக்கப்பட்டது. எவ்வாறாயினும், நாட்டில் நிலவும் பாதகமான பொருளாதார நிலையைக் கருத்தில் கொண்டு, ஒதுக்கப்பட்ட தொகை கிடைக்காத காரணத்தால், சுமார் 05 மாவட்டங்களில் மட்டும் இந்த பணிகள் முழுமையாக மேற்கொள்ளப்பட்டன. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நுண் நிதி வேலைத்திட்டத்தின் கீழ் 25 புதிய சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூபா 7 மில்லியன் ஒதுக்கப்பட்டது. அதில் ரூபா 4.90 மில்லியன், அதாவது ஒதுக்கப்பட்ட தொகையில் 70 சதவீதமான செலவில் 06 புதிய வங்கிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் முழுமையாக அபிவிருத்தி செய்யப்பட்ட நிலையில், 09 வங்கிகளின் உட்கட்டமைப்பு வசதிகள் 50 சதவீதம் மட்டுமே அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. | 2022 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ஒதுக்கீடுகள் மட்டுப்படுத்தப்பட்டதன் காரணமாக, எஞ்சிய 09 புதிய சமூக அடிப்படையிலான ஆரம்ப வங்கிகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கு திறைசேரி ஒதுக்கீடு வழங்கப்படாததுடன் புதிய வங்கிக்கு சொந்தமான கிராம அலுவலர் பிரிவுகளுக்கு சொந்தமாக இருந்த .பழைய சமுர்த்தி வங்கிகளில் பெறப்பட்ட நிதியின் மூலம் அந்த வங்கிகளின் உட்கட்டமைப்பு அபிவிருத்தியில் 50 சதவீதமானது மேற்கொள்ளப்பட்டது. | திட்டமிடப்பட்ட செயற்பாடுகளை சரியான பிரகாரம் அமுல்படுத்துதல் வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் நலிவுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் குருவிட்ட பிரதேச செயலகப் பிரிவின் கீரகல சமுர்த்தி மாதிரிக் கிராமத்தின் 72 பயனாளிகளுக்கு 11 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,970,000 மற்றும் ஓபநாயக்க பிரதேச செயலகப் பிரிவின் மல்மிகந்த சமுர்த்தி மாதிரிக் கிராமத்தில் கித்துல் உற்பத்திகளுக்காக 255 பயனாளிகளுக்கு ரூபா 5,824,451 அரச பங்களிப்பு வழங்கப்பட்டிருந்தும் இந்த செயற்திட்டங்கள் தொடங்கப்பட்டு 04 | சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமையாளர்களின் நெருக்கமான மேற்பார்வையின் கீழ் இத்தொழில்களின் தொடர் நடவடிக்கைகளை முன்னைய நிலைமையை விட முறையான மற்றும் துல்லியமான உத்திகளைப் பயன்படுத்தி நடைமுறைப்படுத்துவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. | வலுப்படுத்தலுக்கான இயலுமை தொடர்பாக பின்தொடரல் செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டுகள் கடந்து விட்டபோதிலும் வருமான உருவாக்கம் பற்றிய தகவல்களைப் பெற்று வலுப்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் தொடர்பான பின்தொடரலொன்று மேற்கொள்ளப்படவில்லை. | | |
| (ஆ) | கம்பஹா மாவட்டத்தின் 13 பிரதேச செயலகப் பிரிவுகளைச் சேர்ந்த சமுர்த்தி மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்,உற்பத்தி கிராமங்களை உருவாக்குவதன் மூலம் சமுர்த்தி பயனாளிகளை வலுவூட்டுவதற்காக, 2016 ஆம் வருடம் முதல் 2020 ஆம் வருடம வரை , கம்பஹா மாவட்டத்தில் 11 மாதிரிக் கிராமங்களுக்காக திணைக்களத்தினால் ரூபா 38,442,329 ஆன தொகை செலவிடப்பட்டது.கணக்காய் விற்கு சமர்ப்பிக்கப்பட்ட 06 மாதிரிக் கிராமங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு 2020 ஆம் ஆண்டளவில் 04 வருடங்கள் கடந்துள்ள போதிலும், செயற்திட்டங்களுக்கான பின்தொடரல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. | ஜாஎல கலேலிய இனிப்பு மாதிரி கிராமத்திற்கு ரூபா 2,270,950 ஆன ஒதுக்கீடு ஆண்டிறுதியில் வழங்கப்பட்டது, எனவே திட்டங்களை செயல்படுத்த போதிய கால அவகாசம் இல்லாததால் அது செயல்படுத்தப்படவில்லை. அதற்கான ஏற்பாடுகள் இரத்து செய்யப்பட்டுள்ளது. அத்துடன், நடைமுறைப்படுத்தப்பட்ட மாதிரிக் கிராமங்களின் தொடர் நடவடிக்கைகள் தற்போது சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் முகாமையாளர்களின் நெருக்கமான மேற்பார்வையின் கீழ் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | வலுப்படுத்தலுக்கான இயலுமை தொடர்பாக பின்தொடரல் செய்யப்பட வேண்டும். |
| (இ) | 2017ஆம் ஆண்டு முதல் 2021ஆம் ஆண்டு வரை குருநாகல் மாவட்டத்தின் 30 பிரதேச செயலகப் பிரிவுகளில் கைத்தொழில், சந்தைப்படுத்தல், விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற் காக 7986 பயனாளிகள் சார்பாக ரூபா 293,281,808 செலவிடப்பட்டுள்ளது. | பிரிவு மட்டம், பிராந்திய மட்டம், பிரதேச செயலக மட்டம் போன்றவற்றில் மாதாந்த முன்னேற்றத்தைப் பின்தொடர்ந்து கலந்துரையாடி செயற்திட்டங்களை வெற்றிகரமாகப் பேணுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. | தேவைகளைக் கண்டறிந்து உபகரணங்கள் வழங்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மாதிரி பரிசோதனையில் தெரிவு செய்யப்பட்ட 10 பிரதேச செயலகங்களைச் சேர்ந்த கிராம அலுவலர் பிரிவுகளில் பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட உள்ளீட்டு சாதனங்களை செயற்படுத்தி பெறப்படும் வாழ்வாதார வருமானம் உருவாக்கும் செயற்திட்டங்களில் ஒரே பயனாளிக்கு இரண்டு தடவை வருமானம் ஈட்டும் சாதனங்கள் வழங்கப்பட்டு மற்றும் , பயனாளியின் தொழில் சரியாக அடையாளம் காணப்படாமல் பொருட்கள் சாதனங்கள் வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் காணப்பட்டன. அத்துடன், உபகரணங்களை வழங்கும்போது பயனாளி புதிய திட்டத்துக்கான உபகரணங்களை பெறுகின்றாரா அல்லது பழைய திட்டத்துக்கான உபகரணங்களைப் பெறுகின்றாரா என்பது தொடர்பில் பின்தொடரலொன்று மேற்கொள்ளப்படவில்லை. | நாட்டில் நிலவும் பொருளாதாரச் சிக்கல்கள், மூலப்பொருட்களின் அதிக விலை, விற்பனையில் உள்ள சிரமம் போன்றவை அந்தந்த திட்டங்களின் முன்னேற்றத்திற்கு தடையாக உள்ளன. தோல்வியுற்ற திட்டங்கள் கண்டறியப்பட்டு வெற்றிகரமான திட்டப் பயனாளிகளிடமிருந்து நன்மைப் பங்களிப்புகள் மீட்கப்பட்டு புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு திட்ட உபகரணங்களும் கையளிக்கப்பட்டுள்ளன. அது பிரதேச செயலாளரின் அங்கீகாரத்துடன் செய்யப்பட்டுள்ளது. வெற்றிகரமான திட்டங்களின் மூலம் அவர்களின் வாழ்க்கை நிலைமைகள் மேம்பட்டுள்ள வளமான மக்களின் சமுர்த்தி மானியங்களை நீக்குவதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்று பயன்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஈ) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் 04 சிற்றுண்டிச்சாலைகளை நிர்மாணிப்பதற்காக ரூபா 19,748,110 செலவிடப்படிருந்ததுடன் 2023 மார்ச் வரையில் அந்தக் கடைகள் திறக்கப்படுவதற்கு முடியாதிருந்தது. ஹபராதுவ, மத்துகம மற்றும் கிளிநொச்சி சிற்றுண்டிச்சாலைகளுக் காக மேலும் செலவிடுவதற்கு எதிர்பார்க்கப்படும் தொகை ரூபா 19.55 மில்லியன் ஆக மதிப்பிடப்பட்டுள்ள போதிலும் | 2023ம் ஆண்டு இதற்கான ஒதுக்கீடு வழங்க திட்டமிடப்பட்டும் திறைசேரி ஒதுக்கீடுகள் கிடைக்காததால், பணிகள் முடிக்கப்படவில்லை. இது திணைக்களத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிலைமை ஒன்றாகும். ஆனால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளுடன் ஒப்பிடும்போது கட்டுமானத் துறையில் தற்போது விலைகள் மிக அதிகமாக இருப்பதால், முன்னர் செய்யப்பட்ட செலவுகள் | சொத்துக்கள் ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தப்பட வேண்டும். |

| | |
|---|---|
| இதற்கான ஒதுக்கீடு 2023 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படவில்லை. இதன பிரகாரம் விற்பனை நிலையங்களின் நிர்மாணம் ஆரம்பிக்கப்பட்டு 02 வருடங்கள் கடந்துள்ள போதிலும், பணிகள் நிறைவடையாததால் இந்த விற்பனை நிலையங்கள் விளைவற்று காணப்பட்டமை மற்றும் சமுர்த்தி பயனாளிகளை சிற்றுண்டிச்சாலைகளுக்கு அனுப்பி வருமானம் ஈட்டுவதன் மூலம் வலுவூட்டலுக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தமை போதிய அளவில் இல்லை என்பதும் அவதானிக்கப்பட்டது | விளைவற்றவை அல்ல எனவும் மீதமுள்ள பணத்தை வழங்கியவுடன், இந்த கடைகளின் கட்டுமானத்தை முடித்து தொழில்முனைவோர் களுக்கு வேலை வாய்ப்புகளை வழங்க முடியும். |

## 3.4 ஏனைய அவதானிப்புக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **நிதி முறைகேடுகள்**<br><br>சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களில் 2014-2018 காலப்பகுதியில் ஏற்பட்ட ரூபா 115,723,619 பெறுமதியான 135 மோசடிகள் தொடர்பாக 2018 மற்றும் 2019 கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளில் சுட்டக்காட்டப்பட்டிருந்தன. 2023 ஏப்ரல் 21 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவலின்படி 2014-2018 காலப்பகுதிக்கான 15 மோசடிகளுக்காக ரூபா 63,817,207 உம் 2019 முதல் 2023 பெப்ரவரி வரையில் 92 | புலனாய்வுத் திணைக்களங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட நிதி மோசடிகள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, குற்றத்தை ஒப்புக்கொள்ளும் அதிகாரிகளுக்கு மொத்த மோசடித் தொகையும் செலுத்தப்பட்டதன் பின்னர் ஒழுக்காற்று உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இல்லையெனில், முறையான ஒழுக்காற்று விசாரணைக்குப் பிறகு, ஒழுக்காற்று உத்தரவு பிறப்பிக்கப்படும் போது மோசடி செய்யப்பட்ட | பிழைகள் மற்றும் முறைகேடுகளைக் குறைப்பதற்கு வங்கி அமைப்பில் ஒரு நல்ல உளளக் கட்டுப்பாட்டு அமைப்பை உருவாக்கி, திறம்பட பராமரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மோசடிகளுக்காக ரூபா 172,189,227 உம் அடையாளம் காணப்பட்டிருந்தன. அனைத்து சமுர்த்தி வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்கள் கணனிமயமாக்கப்பட்ட செயல்முறைக்கு உட்படுத்தப்பட்டதால் வாடிக்கையாளர்களின் பணிகள் திறம்படச் செய்யப்படுவதுடன் அத்துடன் கைமுறை (Manual) மூலம் செய்யப்படும்போது வேண்டுமென்றே செய்யப்படும் தவறுகள் மற்றும் நிதி மோசடிகளைக் குறைக்கும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அறிக்கையிடப்பட்ட நிதி மோசடிகள் மற்றும் முறைகேடுகள் கணிசமான அளவொன்றாக இருந்தது. | முழுத் தொகையும் வசூலிக்கப்படும். மேலும், ஒழுக்காற்று உத்தரவுகளை வழங்கும்போது ஒரு அதிகாரியை பணிநீக்கம் செய்ய உத்தரவிடப்பட்டால், மோசடி செய்யப்பட்ட மொத்தத் தொகையையும் அபராத வட்டியையும் திரும்பப் பெறுவதற்கு சட்டத்தின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஆ) | 2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க திவிநெகும அதிகாரச் சட்டத்தின் 36 வது பிரிவின் கீழ் திவிநெகும அபிவிருத்தி நிதியம் ஸ்தாபிக்கப்பட வேண்டும் மற்றும் திணைக்களத்திற்கு கிடைக்கின்ற அனைத்து மானியங்கள், பரிசுச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட வங்கிகள் மற்றும் வங்கிச் சங்கங்களின் பரிசுகள் மற்றும் பிற பங்களிப்புத் தொகை, வங்கிகளின் இலாபத்தில் இருந்து அமைச்சரால் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையின் சதவீதமாக அனைத்து பெறுவனவுகளும் ஒருங்கிணைக்கப்பட்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். அதன் பின்னர் | சமுர்த்தி நிதியத்தை ஸ்தாபிப்பது தொடர்பில், கணக்குகளை ஆரம்பிப்பதற்கு திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தின் அங்கீகாரம் கோரப்பட்ட போதிலும், அதற்கான அங்கீகாரம் இதுவரை கிடைக்கப்பெறவில்லை. | சட்டத்தில் கறிப்பிடப்பட்டள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நிதியம் ஸ்தாபிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பாராளுமன்றத்தின் அங்கீகாரத்துடன் திவிநெகும அபிவிருத்தி நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் திவிநெகும அபிவிருத்தி நிதியம் இது வரை ஸ்தாபிக்கப்படவில்லை. | | |
| (இ) | மேற்படி சட்டத்தின் 45 ஆவது பிரிவின்படி, திணைக்களத்தினால் 06 நிதியங்கள் பராமரிக்கப்பட்டு வருவதுடன் சமுர்த்தி நிதியம் மற்றும் ஊழியர் கடன் சுழற்சி நிதியம் என்பன தற்போது செயலற்றுக் காணப்பட்டன. | சமுர்த்தி நிதியத்தின் செயற்பாடு வருமானம் ஈட்டுவதில் இருந்து கிடைக்கின்ற தவணை மற்றும் வாடகை வருமானத்தை சேகரிப்பது மற்றும் நாடளாவிய ரீதியில் உள்ள வருமானத்தை உருவாக்கும் திட்டங்களில் கிடைக்கின்ற வருமானத்தை முதலீடு செய்வது மற்றும் மறு முதலீடு செய்வது என்பதுடன் அந்த பணிகள் தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஊழியர் கடன் சுழலும் நிதியம் மேலும் ி பயன்படுத்தப்படாத போதிலும் நிதியத்திலிரந்து செலுத்தப்பட்ட கடன்கள் தொடர்ந்து வசூலிக்கப்படும். அனைத்து கடன்களும் வசூலிக்கப்பட்டு ஒருங்கிணைந்த நிதியத்தில் பணம் செலவு வைக்கப்பட்ட பிறகு, இந்தக் கணக்கு கலைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செயலற்ற நிதியங்களை கலைத்து, நிதியத்தில் வைத்திருக்கும் பணத்தை ஒருங்கிணைந்த நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | 2020 ஆகஸ்ட் 22 ஆம் திகதிய 2020/01 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15.2 (ஆ) பந்தியின் படி, தற்போதுள்ள நிதியங்களின் செயல்பாடு தேசிய நலனுக்காக இருப்பதாகத் தோன்றினால், அந்த | 2013 இன் 01 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் பிரகாரம் திணைக்களமாக மாற்றப்பட்ட சமுர்த்தி அதிகாரசபையானது சமுர்த்தி அபிவிருத்தி திணைக்கள சட்டத்தின் 45 ஆவது பிரிவின் பிரகாரம் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிதியங்கள் பாராளுமன்றச் சட்டமொன்றினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும் சமுர்த்தி தேசிய சமூக நிதியம் பாராளுமன்றச் சட்டமொன்றினால் அங்கீகரிக்கப்படாது செயற்படுத்தப்படுகின்றது. | பேணுப்பட்டு வருகின்ற அந்நிதியம் அந்த நோக்கத்திற்காகவும் சமூக அடிப்படையிலான அமைப்புக்கள், பிராந்திய அமைப்புகளாகவும் இயங்கிய அந்த அமைப்புக்கள் தேசிய சமூக அபிவிருத்தி நிதியமாக இது சமூகக் கட்டமைப்பு தொடர்பில் நடைமுறைப்படுத்தப்படு வதால் இது புதிய நிதியமல்ல என்பதை குறிப்பிட விரும்புகின்றேன். | |
| (உ) | சமுர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்தின் சட்டரீதியான நிலைமை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததுடன் நிதியத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2023 மே 22 அன்று கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது. சமூகத்தில் சமூக நீதியை அடைவதற்காக நிறுவப்பட்ட இந்த நிதியத்தின் மூலம் 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் ரூபா 8,481,773 ஆன 03 செயற்திட்டங்கள் மட்டுமே செயற்படுத்தப்பட்டிருந்தன. 2022 திசெம்பர் 31 இல் ரூபா 8,048,684 ஆன மீதியொன்று நிதியத்தில் இருந்தது. 2022 திசெம்பர் 31 வரை சங்கங்கள் பதிவு செய்து கொடிகளை விற்ற பணத்தில் இருந்து ரூபா 91,000,000 ஆன நிலையான வைப்பு நிலுவைகள் பராமரிக்கப்பட்டு வருவதுடன் , ஒருங்கிணைக்கப்பட்ட நிதியத்திற்கு ரூபா 10,000,000 மட்டுமே செலவு வைக்கப்பட்டிருந்தது. | 2017 ஆம் ஆண்டு முதல் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன. 2021/2022 ஆண்டுகளில், நாட்டில் நிலவிய மோசமான சூழல் காரணமாக எந்தவொரு சமூக நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முடியாமல் நிதியம் பொதுவாக பாதிக்கப்பட்டுள்ளது. மேலும், 2019/2020/2021/2022 ஆகிய ஆண்டுகளில் கொடிகள் விற்பனை நடைபெறாததுடன் 2023 ஆம் ஆண்டு முதல் இந்த நிதியத்தை செயற்திட்டங்களுக்கு திறம்பட பயன்படுத்துவதற்கான நிகழ்ச்சித்திட்டமொன்று செயல்படுத்தப்படுகிறது. | நிதியத்தின் நோக்கங்களை அடைவதற்காக பயனுள்ள திட்டங்களுக்கு நிதியை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | திவிநெகும சமூக அடிப்படையிலான வங்கி மற்றும் சமூக அடிப்படையிலான வங்கிச் சங்கங்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கணக்காய்வை மேற்கொள்வதற்கு முடியுமான சட்டரீதியான ஏற்பாடுகள் உருவாக்கப்பட்டு சட்டத்தை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | 2023 ஏப்ரல் 25 அன்று நடைபெற்ற அரச கணக்குகள் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின்படி, மாண்புமிகு சட்டமா அதிபருக்கு 2023 ஏப்ரல் 26 அன்று கடிதமொன்று அனுப்பப்பட்டதுடன் அதன் மூலம் அரச கணக்குகள் குழுக் கூட்டத்திற்கு சமர்ப்பிப்பதற்காக சட்டமா அதிபரின் அபிபிபிராயத்தை விரைவில் வழங்குமாறு கோரப்பட்டிருந்தது. | சமுர்த்தி அபிவிருத்திச் சட்டம் திருத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (எ) | சமுர்த்தி பயனாளிகளின் கட்டாய சேமிப்புக் கணக்குகளில் உள்ள பணம் மற்றும் பல்வேறு நோக்கங்களுக்காக அமைக்கப்பட்டுள்ள திணைக்களத்தில் காணப்பட்ட நிதியக் கணக்குகளில் இருந்து அவற்றின் நோக்கங்களுக்கு முரணாக ரூபா 53,594.67 மில்லியன் அரசாங்கத்தின் பல்வேறு தேவைகளுக்காக வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதியில் இந்தத் தொகையில் ரூபா 53,294.97 மில்லியன் (வட்டியுடன்) இன்னும் அறவிட வேண்டியதாக காணப்பட்டது. | அரசாங்க கொள்கை முடிவுகளை செயல்படுத்துவதை ஆதரிப்பதன் அடிப்படையில், இது செயற்படுத்தப்பட்டு 2013 ஆகஸட்/செப்/ஒக் சமுர்த்தி மானியக் கொடுப்பனவு, இழப்பீடு பணிக்கொடை செலுத்துதல், கோவிட் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூபா 5,000 கொடுப்பனவு வழங்குவதற்காக செய்யப்பட்ட செலவுகளை திருப்பிச் செலுத்துதல் ஆகியவை திறைசேரியால் ஒப்புக் கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல் களாகும். இந்த அனைத்து கொடுக்கல்வாங்கல் களிலும் சில தொகைகள் ஏற்கனவே திருப்பிச் செலுத்தப்பட்டுள்ளதுடன், மீதியை மீளச் செலுத்துவதற்கான அமைச்சரவைப் பத்திரமும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சமுர்த்தி பயனாளிகளின் நல்வாழ்வுக்காக, அவர்களின் மானியப் பணத்தில் இருந்து திரட்டப்படும் நிதியை உரிய பணிகளுக்குப் பயன்படுத்தி, உரிய பணத்தை மீளச் செலுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 வெளிநாட்டுதவி செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) தற்போதைய பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணிக்கவும், சமூக ஸ்திரத்தன்மையை மீட்டெடுக்கவும், உலக வங்கி உதவியின் கீழ் 2022 நிதி மானியமாக ரூபா 39,640 மில்லியன் தொகையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன. | | |
| (i) தரவு அமைப்பின்படி, சமுர்த்தி காத்திருப்பு பட்டியல்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வங்கிகளுக்கு பணம் அனுப்பப்பட்டிருந்தும் மே, ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் 78,604 பயனாளிகளின் கணக்குகள் பல்வேறு காரணங்களுக்காக வங்கியால் அகற்றப்பட்டிருந்ததுடன் அப்பயனாளிகளின் பணமும் அனுப்பப்பட்டுள்ளது. திணைக்களத்திற்கு சொந்தமான தரவு அமைப்பு சரியாக நாளதுவரையாக்கப் படாமை இதற்கு காரணமாக இருந்தது. | பயனாளிகளுக்கு பணம் செலவு வைக்கப்படுகின்ற சந்தர்ப்பம் வரை கொடுப்பனவைத் தவிர்ப்பதற்காக முடிவொன்று எடுக்கப்பட்டிராமையால் பணம் செலவு வைக்கப்படுதலானது அடிப்படை ஆவணங்களின் பிரகாரம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டத்தை செயல்படுத்துவதில் பல நடைமுறைச் சிக்கல்களின் தாக்கம் அவதானிப்பில் குறிப்பிடுள்ள நிலைமைக்கு காரணமாக இருந்ததுடன் தரவு அமைப்பு சரியாக நாளதுவரையாக்கப் படாமை போன்ற விடயங்களுக்கு மட்டும் அதை மட்டுப்படுத்த முடியாது. | திணைக்களத்திற்குச் சொந்தமான தரவு அமைப்பு நாளதுவரையாக்கப் பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மானியப் பண விநியோகம் தொடர்பாக, பல சமூக அடிப்படையிலான வங்கிகளில் நடாத்தப்பட்ட மாதிரிச் சோதனையின் போது, 02 பிரதேச செயலகப் பிரிவுகளின் இரண்டு சமூக அடிப்படையிலான வங்கிகளால் நிதி மானியமாக மேலதிக கொடுப்பனவுகள் மொத்தம் ரூபா 55,529,060 ஆனது 22 நாட்கள் முதல் 106 நாட்கள் வரை பயனாளிகளுக்கு வழங்கப்படாமல் சமூக அடிப்படையிலான வங்கிகளில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. | இந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான அறிவுறுத்தல் சமுர்த்தி சமூக அடிப்படையிலான வங்கிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் மானியங்கள் வழங்கப்பட்டவுடன் பயனாளியின் கணக்குகளுக்கு செலவு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குறிப்பிடப்பட்டு இந்நிலைமையை தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | நலன்கள் விரைவாக பயனாளிகளின் கணக்குகளுக்கு செலவு வைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.6 பெறுகைகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய பீஎவ்டீ/08/2019 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் பொது நிறுவனங்கள் 2020 ஆம் ஆண்டு முதல் மின் பெறுகை செயல்முறையை பின்பற்ற வேண்டுமென்பதுடன் திணைக்களம் தேசிய மின் அரச பெறுகை அமைப்பில் பதிவு செய்யப்பட வேண்டும். ஆனால் இந்த அறிக்கைத் திகதி வரையில் திணைக்களம் பதிவு செய்யப்படவில்லை. சந்தை விலைமனுக்கோரல் முறையின் கீழ் செய்யப்படும் பெறுகைகள் 2020 ஆம் ஆண்டு முதல் மின் பெறுகை முறை மூலம் செய்யப்பட வேண்டிய | எதிர்காலத்தில் தேசிய மின் அரச பெறுகை அமைப்பில் பதிவு செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும் அதற்கேற்ப நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (ஆ) | பெறுகை திட்டம் தயாரிக்கும் போது அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) மற்றும் 4.2.2(அ) இன் பிரகாரம் பெறுகை செயற்பாடுகள் விரிவாகவும் மற்றும் பெறுகை கால அட்டவணையில் உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | அறிவுறுத்தலின் பிரகாரம் பெறுகை திட்டம் தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்குமாறு விடய அதிகாரிக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் மென்பொருளை கொள்வனவு செய்தல் உட்பட “e” செய்திப் பத்திரிகை முதல் பக்கம் தயாரிப்பதற்காக ரூபா 7,723,900 செலவிடப்பட்டிருந்தது. 2022 ஆம் ஆண்டின் இறுதிக் காலாண்டில், e செய்தித்தாள் பாவனையாளரின் எண்ணிக்கை 56,234 ஆகவும், e செய்தித்தாள் தொலைபேசி செயலி (e paper app) பாவனையாளரின் எண்ணிக்கை 21,565 ஆகவும் அதாவது மொத்த சமுர்த்தியாளர்களில் 4.6 சதவீதமாக இருந்தமையால் செயற்பாடு மிகவும் குறைவான மட்டத்தில் காணப்பட்டது. | சமுர்த்தி பயனாளிகளில் 4.6 சதவீதம் பயனாளிகள் உள்ளமை மற்றும் தொலைபேசி பயன்பாடு நிறுவப்பட்டதன் அடிப்படையில் பெறப்படுதல் சரியானதல்ல.இதற்குக் காரணம், சமுர்த்தித் திட்டத்தின் பல்வேறு பிரிவுகள் தொடர்பாக மாவட்ட அளவில் பல வாட்ஸ்அப் குழுக்கள் உள்ளதால், அந்த வாட்ஸ்அப் குழுவிற்கு மாதந்தோறும் ” e ” செய்தித்தாள் அனுப்பப்படுகிறது. | அடிப்படை நோக்கங்கள் மற்றும் இலக்குகளை மக்களுக்கு மிகவும் திறமையாகவும் திறம்படவும் தெரிவிக்க பொருத்தமான வேலைத்திட்டம் அமைக்கப்பட வேண்டும். |

### 3.8 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாமை

திணைக்களத்தால் வெளியிடப்பட்ட கீழ்வரும் விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ள கணக்காய்வு ஐயவினாக்களுக்காக 2023 யூன் 09 வரை பதில் அனுப்பப்பட்டிருக்கவில்லை.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது சமர்ப்பிக்கப்பட்ட 12 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிப்பதற்கு 1 மாதம் முதல் 5 மாதங்கள் வரையான காலப்பகுதியொன்று தாமதமாகியிருந்ததுடன் 5 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்படாதிருந்தது. அந்த ஐயவினாக்களுக்குரிய கணிப்பீடு செய்யக்கூடிய கொடுக்கல் வாங்கல்களின் பெறுமதி ரூபா 4,254,728,365 ஆகும். | இதுவரை மீளாய்வாண்டிற்கான அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் பதிலளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மாவட்டச் செயலகம்/பிரதேசச் செயலகம் மற்றும் திணைக்களம் மற்றும்சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களில் பதில் மற்றும் தெளிவுபடுத்தல்கள் பெறப்பட்டு ஐயவினாக்களுக்கான பதில்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருப்பதால் கால தாமதமொன்று எற்பட்டிரந்தமையை ஏற்றுக்கொள்கின்றோம். | கணக்காய்வு ஐயவினாக்களுக்கு விரைவில் பதிலளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.9 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **பயனாளிகள் முகாமைத்துவ மொடியூல்** | | |
| 2012 ஆம் ஆண்டில், இலங்கை தகவல் தொழில்நுட்ப நிறுவகத்தினால் உருவாக்கப்பட்ட சமுர்த்தியாளர்கள் மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களின் தகவல்களை உள்ளடக்கிய | இந்த மொடியூல் உருவாக்கப்பட்டதன் பின்னர், அதை செயற்படுத்தல் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுவதற்காக ,இந்த மொடியூலை உருவாக்கிய நிறுவனத்துடன் பராமரிப்பு | பயனாளிகள் முகாமைத்துவ மொடியூல் நாளதுவரையாக்கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். |

| | |
|---|---|
| முகாமைத்துவ தொகுதி தொடர்பான அமைப்பை அபிவிருத்தி செய்வதற்கான e-சமுர்த்தி திட்டத்திற்கு 2016 ஆம் ஆண்டில் ரூபா 4.3 மில்லியன் செலவிடப்பட்டதுடன் , 2019 ஆம் ஆண்டில் மீண்டும் CRM தொகுதிக்காக ரூபா 4.07 மில்லியன் செலவிடப்பட்டது. ஆனால் 2023 ஆம் ஆண்டு வரையில் பின்வரும் துணைத் தொகுதி தகவல்களைச் சேர்ப்பதன் மூலம் அமைப்பு நாளதுவரையாக்கப்பட வில்லை. | மற்றும் சேவை வழங்கல் தொடர்பாக ஒப்பந்த நடைமுறையொன்று ICTA இனால் இனங்காணப்படாததுடன் சமுர்த்தி அதிகாரபை திணைக்களமொன்றாக மாற்றப்பட்டதன் பின்னர் முகாமைத்துவத்தில் ஏற்பட்ட மாற்றம் காரணமாகவும் ஒவ்வொரு தொகுதியும் தொடர்ச்சியாக பராமரிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது. |
| • நீர் மற்றும் மின்சார பாவனை தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. | • திட்டமிடல் காலத்தில் சமுர்த்தி வங்கிகள் ஊடாக ஏனைய வகை மானியங்களுக்கான (முதியோர், சிறுநீரகம் மற்றும் ஊனமுற்றோர்) கொடுப்பனவுகள் செய்யப்பட வேண்டியிருந்ததால், பணிச்சுமை காரணமாக தரவு சேகரிப்பு ஒத்திவைக்கப்பட்டது. |
| • கோவிட்-19 மானியங்களை வழங்குவது தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. | • கோவிட்-19 தொற்றுநோய்களின் போது வழங்கப்பட்ட ரூபா 5,000 கொடுப்பனவு தொடர்பான 2,376,826 நபர்களின் தகவல்கள் உள்ளிடப்பட்டுள்ளன. |
| • வாழ்வாதாரத் திட்டங்களின் தற்போதைய முன்னேற்றம் மற்றும் செயல்படுத்தல் நிலை மற்றும் பயனாளிகளின் வலுப்படுத்தல் முறைமைகள் பற்றிய | • ஒவ்வொரு பிராந்திய அலுவலகத்தின் சமூக சேவை அலுவலருக்கும் கணினியை அணுகுவதற்கு பயனர் பெயர்கள் வழங்கப்பட்டு பயிற்சி வழங்கப்பட்ட போதிலும், |

| | |
|---|---|
| தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. | தொடர்புடைய இரண்டு நிறுவனங்களின் (முதியோர் மற்றும் ஊனமுற்றோர் பொதுச் செயலகம்) தகவல்கள் பராமரிக்கப்படவில்லை. |
| • அமைப்பு நாளதுவரையாக்கப்படாமையால், 2018 முதல் 2021 அக்டோபர் வரை 309 பயனாளிகளின் சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் பரிசுத் தொகையான ரூபா 61.8 மில்லியன் ஆன தொகை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | • 2018 முதல் 2021 யூன் வரை, CRM தொகுதியின் தரவுகள் வீடமைப்பு லொத்தர சீட்டிழுப்பிற்கு பயன்படுத்தப்படவில்லை. 06 மாதங்களுக்கு ஒருமுறை Excel கோப்புகளில் தரவு சேகரிக்கப்பட்டு சீட்டிழுப்பிற்கு பயன்படுத்தப்படுவதால் இந்தச் சேமிப்பு ஏற்படுகிறது. |
| • முதியவர்கள், ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரகப் பயனாளிகளின் பற்றிய தகவல்கள் உள்ளடக்கப்பட வில்லை. | •மேற்படி மானியங்களுக்காக இரண்டு நிறுவனங்களிடமிருந்து இதற்குத் தேவையான ஆதரவு கிடைக்கவில்லை. |
| • மாதாந்த மானியப் பணத்தை பிரதேசச் செயலகங்களுக்கு அனுப்பும் போது சரியான தரவுகள் பெறப்படாமையால் மானியப் பணம் அதிகமாக அனுப்பப்பட்டிருந்தமை. | • CRM தொகுதி மூலம் மிகவும் துல்லியமான அறிக்கை தயாரிக்கப்படுகிறது. இந்த தொகுதியை செயல்படுத்துவதன் மூலம் மிக சிறிய சேமிப்பு காணப்பட்டது. |

(ஆ) **மனித வள முகாமைத்துவ மொடியூல்**

| | | |
|---|---|---|
| சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தில் மனித வள செயற்பாடுகளை வினைத்திறனாக்கும் நோக்கில் மனித வள முகாமைத்துவ தொகுதி | 2021 ஆம் ஆண்டில் அடிப்படை செயற்பாட்டை அபிவிருத்தி செய்து பாவனைக்காக வழங்கப்பட்டிருந்ததுடன் தனிப்பட்ட கோவைகளை | மனித வள முகாமைத்துவ மொடியூல் நாளதுவரையாக் கப்பட்டு பராமரிக்கப்பட |

ஆரம்பிக்கப்பட்டது. இந்த அறிக்கையின் திகதி வரையில் 25,23 திணைக்கள ஊழியர்களில் 97 சதவீதமானவர்களின் அடிப்படை தகவல்களை மட்டுமே உள்ளடக்கப்பட்டுள்ளது. கல்விச் சான்றிதழ் உள்ளிட்ட முக்கிய ஆவணங்களை ஸ்கேன் செய்து 306 தனிப்பட்ட கோப்புகள் மட்டுமே முடிக்கப்பட்டிருந்தன. அதன் பிரகாரம் 2021 இல் அறிமுகப்படுத்தப்பட்ட இந்த அமைப்பின் செயல்பாடு 2023 வரையில் இன்னும் ஆரம்ப நிலையிவேயே காணப்பட்டது.

உள்ளீடு செய்யும் தொகுதி 2022 ஆம் ஆண்டின் நடுப்பகுதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதுவரை உரிய அதிகாரிகளுக்கு பயிற்சியளித்தல் Zoom தொழிநுட்பத்தின் மூலம வழங்கப்பட்டிருந்ததுடன் ஓய்வூதியம் பெற்றுக் செல்கின்ற ஒழுங்கில் தனிப்பட்ட கோவைகள் அமைப்பிற்கு உள்ளீடு செயவதற்கு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வேண்டும்.

(இ) **சமூக அடிப்படையிலான வங்கி கணனி அமைப்பு**

சமுர்த்தி அடிப்படையிலான வங்கியானது வினைத்திறனான பரிவர்த்தனைகளுக்காக Soft Watch மற்றும் SLTS ஆகிய இரண்டு மென்பொருட்களை அறிமுகப்படுத்தியிருந்தது. சமுர்த்தி வங்கியின் 1026 கிளைகள் இந்த மென்பொருளைப் பயன்படுத்தி வருவதுடன் தலைமை அலுவலகத்துடன் ஒருங்கிணைக்கப்படாத 12 கிளைகள் 10 ஆண்டுகளுக்கும் மேற்பட்ட பழைய மென்பொருளைக் கொண்டு இயங்குகின்றன. அமைப்பின் செயல்பாடு குறித்து, 09 சமூக அடிப்படையிலான வங்கிகளில் நடாத்தப்பட்ட மாதிரி பரிசோதனையின்போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

இந்த அனைத்து வங்கிகளிலும் புதிய online மென்பொருள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வங்கி மென்பொருளில் தன்னிச்சையாக கடனை அறவிடுவதற்கு முடியும் என்றாலும், மானியத்திற்காக பெறப்பட்ட பணத்தை பயனாளியின் அனுமதியின்றி கடனுடன் ஈடுசெய்ய முடியாது. இத்தொகை கடன் விண்ணப்பத்தின் போது மென்பொருளில் hold செய்யப்படுவதுடன் மற்றும் தானியங்கி கடன் விண்ணப்பத்தின் போது இத்தொகை கடனுக்கு எதிராக ஈடுசெய்யப்பட மாட்டாது.

ஆனால் பயனாளியின் சம்மதத்தின் பேரில் முகாமையாளர்களால் hold செய்யப்பட்ட பிடியை நீக்கி கடனை ஈடு

பயனாளிகளுக்கு செயற்திறனான சேவையொன்றை பெற்றுக் கொள்வதற்கு முடியுமானவரை வங்கி கணனி அமைப்பு நாளதுவரையாக் கப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும்.

ஒரு நாளைக்கு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பணப்பரிமாற்றங்களை மட்டுமே செயற்படுத்த முடியுமென்பதால் அமைப்பு மந்தகதியில் இயங்குதல்,கடன் வசூலிப்பதில் முறைமையொன்று இல்லாமை, கணக்கு நிலுவைகள் சரியாக இல்லாமை , முன்னைய பரிவர்த்தனைகளைச் சரிபார்க்க முடியாமை, கணனி அமைப்பு அவ்வப்போது செயலிழக்கின்றமை, வங்கியின் முக்கிய தரவுகளை அணுகும்திறன் மென்பொருள் நிறுவனத்திற்கு உள்ளமை போன்ற காரணங்களினால் தரவுகள் மாற்றமடைவதற்கான சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றமை மற்றும் கணனி அமைப்பின் மூலம் சமுர்த்தியாளர்களின் கணக்கில் செலவு வைக்கப்பட்டுள்ள பணத்திலிருந்து தானாக கடன்களை வசூலிக்க கணனி அமைபபில் வசதிகள் செய்யப்பட்டிருப்பதன் காரணமாக 05 சமூக வங்கிகளைச் சேர்ந்த 173 மானியப் பயனாளிகளின் கணக்குகளில் செலவு வைக்கப்பட்டுள்ள ரூபா 3,857,777 ஆன மானியப்பணம் கடன் தவணையாக வசூலிக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் மாதிரி பரிசோதனையின்போது அவதானிக்கப்பட்டது. செயயப்படுகின்றது.வங்கிகள் மென்பொருளைப் பயன்படுத்தும் போது கணினியில் உள்ள குறைபாடுகளை சரிசெய்வதற்காக தரவு அமைப்பை அணுகுவதற்கு வாடிக்கையாளர் நிறுவனங்களுக்கு திணைக்களம் அனுமதி வழங்கியுள்ளது. இதில் சம்பந்தப்பட்ட வங்கி மற்றும் திணைக்களத்தின் முழு அறிவோடு மட்டுமே தரவுகளை மாற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படுகிறது. சேவை வழங்குநரிடமிருந்து அந்த சேவைகளைப் பெறுவதற்கான முக்கிய காரணம், திணைக்களத்திற்கு மென்பொருள் பொறியாளர்கள் அல்லது தரவுத்தள நிர்வாகிகள் இல்லை. அந்த நிறுவனங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில அதிகாரிகளுக்கே அந்த வாய்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன

### 3.10 2016.12.16 ஆம் திகதி நடைபெற்ற குழுக்கள் கூட்டத்தில் வழங்கப்பட்ட உத்தரவுகள் செயற்படுத்தப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **உத்தரவு இலக்கம் 7.3** | | |
| திவிநெகும அபிவிருத்தி திணைக்களத்தினால் 6 சந்தர்ப்பங்களில் ரூபா 54.02 மில்லியன் அச்சீட்டு பணிகள் உரிய நிதிப்பிரமாணங்களுக்கு முரணாக மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக உள்ளக சோதனையொன்று நடாத்தப்பட்டு அறிக்கையொன்றை சமர்ப்பிப்பதற்கு உத்தரவிடப்பட்டமை. | 2018 செப்டெம்பர் 28 ஆம் திகதிய அமைச்சரவை குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கையின் பரிந்துரை பற்றிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் மீண்டும் இவ்விடயம் தொடர்பாக சமுர்த்தி , வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய , சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயளாளரால் பெயரிடப்பட்ட மேலதிக செயளாளர் ஒருவரின் தலைமையில் மூன்று உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டு உரிய விசாரணை நடாத்தப்பட்டு வருகின்றது. | உள்ளக விசாரணை விரைவில் முடிக்கப்பட வேண்டும். |
| **உத்தரவு இலக்கம் 9.1** | | |
| பொது திறைசேரியின் அங்கீகாரமின்றி ரூபா 106,873,148 ஆன தொகை செலவிடப்பட்டு நீர்த் தாங்கி கொள்வனவு செய்யப்பட்டமை, கணக்காய்விற்கு தகவல்களை சமர்ப்பிக்காமை மற்றும் போக்குவரத்துக்காக விலை மனுக்கள் கோரப்படாமல் நிறுவனம் தேர்ந்தெடுக்கபட்டமை மற்றும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டமை. | IRM/AdI/மூ.வி/21/ ப்ரதிக்ஷேப ஆம் இலக்க மற்றும் 2019 யூன் 26 ஆம் இலக்க கடிதம் மூலம் பொது நிர்வாக , அனர்த்த முகாமைத்துவ மற்றும் கிராமிய பொரளாதார நடவடிக்கைகள் அமைக்கின் மூலம் உரிய ஆரம்ப விசாரணைகள் போதியளவு அதிகாரிகள் இன்மையால் செய்யப்பட முடியாதிருந்ததாக | ஆரம்பகட்ட விசாரணைகள் விரைவில் முடிக்கப்பட்டு கொள்வனவுகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, முதற்கட்ட விசாரணையை அமைச்சு நடாத்தி வருகின்றது. | |

**உத்தரவு இலக்கம் 9.4**

| | | |
|---|---|---|
| திவிநெகும மாநாடுகளுக்கு ரூபா 16,629,435 இற்கு கொள்வனவு செய்யப்பட்ட உபகரணங்கள் மற்றும் நாற்காலிகள் உட்பட உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் விளம்பர நடவடிக்கைகளுக்காக ரூபா 1,954,300 செலவிடப்பட்டமை மற்றும் மொத்தம் ரூபா 16,629,475 ஆன உபகரணங்கள் மற்றும் நாற்காலிகள் விநியோகம் தொடர்பாக இற்றைவரை கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. | கெம்பல் மைதானத்தில் நடாத்தப்பட்ட அமைந்துள்ள மாநாடுகளுக்கு இச்செலவு செலவிடப்பட்டுள்ளது. பெறப்பட்ட 10,000 நாற்காலிகள் பின்னர் காலி,அம்பாந்தோட்டை,குருநாகல் மற்றும் கண்டி மாவட்டங்களில் சமுர்த்தி நடமாடும் வங்கிகளுக்காக வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.இந்த நாற்காலிகள் பெறப்பட்டமை தொடர்பாக மாவட்ட மட்டத்தில் தகவல்கள் பெறப்பட்டு சமர்ப்பிப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. | உபகரணங்கள் மற்றும் நாற்காலிகள் விநியோகம் தொடர்பாக கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**உத்தரவு இலக்கம் 9.5**

| | | |
|---|---|---|
| 5,000,000 திவிநெகும நூல்களை அச்சிடுவதற்கு ரூபா 29,400,000 செலவிடப்பட்டமை மற்றும் அனைத்து அச்சீடுகளும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக கணக்காய்விற்கு உறுதிப்படுத்தாமை. | இவ்விடயம் தொடர்பாக சமுர்த்தி , வதிவிடப் பொருளாதார, நுண் நிதிய , சுயதொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் செயலாளரினால் பெயரிடப்பட்ட மேலதிக செயளாளர் ஒருவரின் தலைமையில் 03 உறுப்பினர்களைக் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டு உரிய விசாரணை நடாத்தப்பட்டு வருகின்றது. | விசாரணை நடவடிக்கைகள் விரைவில் முடிக்கப்பட வேண்டும். |

## 4. மனித வள முகாமைத்துவம்

2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் பின்வருமாறு இருந்தது.

| | | 2022.12.31 ஆம் திகதியில் | | |
|---|---|---|---|---|
| வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடம் | மிகை |
| சிரேஷ்ட | 108 | 79 | 29 | - |
| மூன்றாம் | 1,942 | 1,646 | 296 | - |
| இரண்டாம் | 25,509 | 23,339 | 2,170 | 2,485 |
| ஆரம்ப | 516 | 417 | 99 | 6 |
| | -------- | --------- | --------- | ----- |
| | 28,075 | 25,481 | 2,594 | 2,491 |
| | ===== | ===== | ===== | ==== |

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) அரசாங்கத்தின் கொள்கை தீர்மான அடிப்படையில் 2,287 பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இணைக்கப்பட்டிருந்ததுடன் அதற்கேற்ப அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் திருத்தம் செய்யப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. அத்துடன் சமுர்த்தி முகாமையாளர் பதவிக்கு அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமாக 132 பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தனர். | அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ள வேலைத்திட்டத்தின் பிரகாரம் இத்திணைக்களத்திற்கும் பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அதன் பிரகாரம் 2022 ஆம் ஆண்டில் ஊழியர்கள் மிகையாக காணப்பட்டனர் அதன் பிரகாரம் 2021 செப்டம்பர் 15 ஆம் திகதிய கடிதத்தில், இந்த எண்ணிக்கையை சரிசெய்து அங்கீகாரத்தை பெறுவதற்காக முகாமைத்துவ திணைக்களத்திற்கு கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளன. இன்னும் அங்கீகாரம் பெறப்படவில்லை. | நிர்வாக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தலைமை அலுவலகத்தின் பணிகள், மாவட்ட அலுவலகங்களின் பணிகள் மாவட்டத்தின் கீழ் உள்ள ஒவ்வொரு சமூக வங்கி பிரிவுகளில் உள்ள அதிகாரிகளின் பதவிக்கு ஏற்ப ஆற்ற வேண்டிய பணிகள் தொடர்பான பதவியணியினர் மீளாய்வொன்று இல்லாமல் சேர்த்துக்கொள்ளப்பட்டிருந்தனர். | 100 சமுர்த்தி முகாமையாளர்கள் தற்போது தலைமை காரியாலயத்திற்கு அங்கீகரிக்கப்பட்டன்னதுடன் அந்த உத்தியோகத்தர்கள் அலுவலகப் பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தற்போது, தலைமை அலுவலகத்தில் 97 சமுர்த்தி முகாமையாளர்கள் உள்ளனர். 02 உத்தியோகத்தர்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளதுடன், 06 சமுர்த்தி முகாமையாளர்கள் பயிற்சி நிலையங்களில் இணைக்கப்பட்டுள்ளனர். | பதவியணி மீளாய்வு செய்யப்பட்டு நியமனங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | சமுர்த்தி முகாமையாளர் பதவியை வகிக்கும் 108 அதிகாரிகள் தலைமைக் காரியாலயத்திற்கு நியமிக்கப்படடிருந்தனர். ஆனால் சமூக வங்கிகளில் பதில் கடமை மற்றும் பணி மேவுகைக்காக முகாமையாளர்களாக 123 பேர் வங்கி பதவியணியினருக்கு நியமிக்கப்பட்டு பதில் கடமைக் கொடுப்பனவாக ரூபா 4,096,380 ஆனது 2022 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்டது. இதன் பிரகாரம் திணைக்களத்தின் பணிகள் வினைத்திறனாக மேற்கொள்ளப்படக்கூடிய வகையில் பதவியணியினர் பணியமர்த்தப்படாமை அவதானிக்கப்பட்டது. | சமூக அடிப்படையிலான வங்கிகளில் கடமை மேவுகைக்காக சமுர்த்தி முகாமையாளர்களாக நியமனம் வழங்கப்படுவதில்லை என்பதுடன் பதில் கடமைக் கொடுப்பனவொன்று செலுத்தப்படவில்லை.இந்த அதிகாரிகளுக்கு பயணச் செலவு மற்றும் இணைந்த படிகள் மட்டுமே வழங்கப்படுகிறது. பிரிவுகளில் கடமையாற்றும் அதிகாரிகளுக்கு மட்டுமே பதில் கடமைக் கொடுப்பனவுகள் வழங்கப்படுகின்றன. | திணைக்களத்தின் செயற்பாடுகள் செயற்திறனாக மேற்கொள்ளப்படக் கூடிய பதவியணி ஈடுபடுத்தப்பட வேண்டும். |
| (ஈ) | 2019 யூலை 05 ஆந் திகதிய முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் | தற்போது சமூக அடிப்படையிலான வங்கிகளில் பணிபுரியும் ஊழியர்கள் சமூக | திணைக்களத்தின் செயலாற்றலை அதிகரிக்கும் வகையில் |

பிரகாரம் 2013 இன் 1 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் 25(3) பிரிவின் பிரகாரம் சமூக அடிப்படையிலான வங்கி பதவியணியினர்களுக்காக ஓய்வூதியத்துடன் அரசாங்க ஊழியர்களை நிரந்தர அடிப்படையில் நியமித்தல் சட்டத்திற்கு முரண் என்பதாக கௌரவ சட்டமா அதிபரால் அறிவிக்கப்பட்டிருந்தமை, சமூக அடிப்படையிலான வங்கி சங்கங்களில் தற்போதும் சேவையில் ஈடுபட்டிருக்கின்ற திவிநெகும சட்டத்தின் 44(உ) மற்றும் ii இன் கீழ் திணைக்களத்தில் சேவைக்கு சேர்ந்த உத்தியோகத்தர்கள் தற்காலிக அடிப்படையில் அந்த நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டதாக கவனத்தில் கொள்ள வேண்டியிருந்ததுடன், எதிர்காலத்தில் வங்கி பதவியணியினருக்காக பிரத்தியேக பதவிகளை அங்கீகரித்துக் கொள்வதற்கும், அதன் பின்னர் வெற்றிடமான பதவிகளுக்காக அதன் பிரகாரம் ஆட்சேர்ப்புக்களை சேர்ப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அறிவிக்கப்பட்டிருந்தும் , இதுவரை இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படாததடன் 7605 வங்கி ஊழியர்களுக்கு திணைக்கள செலவு விடயத்தின் கீழ் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆணடிற்காக செலுத்தப்பட்ட தொகை ரூபா 4,259.25 மில்லியன் ஆகும்.

அடிப்படையிலான வங்கிகளில் பணியாற்றுவதற்காக தற்காலிக அடிப்படையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.வங்கி ஊழியர்களுக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திடம் அங்கீகாரம் கோரப்பட்டு 2022 யூன் 22, 2022 அக்டோபர் 20, 2022 சனவரி 17 மற்றும் , 2022 திசெம்பர் 02 ˙ கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன. அங்கீகாரம் வழங்கப்பட்ட பின்னர் இந்த அதிகாரிகள் சமூக அடிப்படையிலான வங்கிகளுக்காக விடுவிக்கப்படுவார்கள்.

நியமிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (உ) | ஓய்வூதிய உரித்தின்றிய சேவைகளில் ஈடுபட்டுள்ளவர்களின் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் மற்றும் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் தொடர்ச்சியாக பங்களிப்பினைச் செலுத்தி திணைக்கள சேவைக்கு சேர்த்துக்கொள்ளப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பதவி உயர்வு நடைமுறையை அங்கீகரித்தலானது இது வரை முடியாதிருந்ததுடன் 2022 திசெம்பர் 31 இல் அந்த ஊழியர்களின் எண்ணிக்கை 546 ஆக இருந்ததடன் அத்தினத்தில் ஓய்வு பெற்றவர்களின் எண்ணிக்கை 41 ஆக இருந்தது. | ஊழியர் சேமலாப நிதியத்தின் கீழ் தொடர்ச்சியாக பங்களிப்பினைச் செலுத்தி வருகின்ற ஊழியர்களின் பதவி உயர்வு நடைமுறைக்கு உரிய பரிந்துரைகள், அங்கீகாரத்தைப் பெறுவதற்காக அமைச்சின் செயலாளர் மூலம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. | பணியை துரிதப்படுத்தி நிர்வாக பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும். |
| (ஊ) | வருடாந்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின்படி, திணைக்களத்தில் உள்ள ஊழியர்களின் உண்மையான எண்ணிக்கை 24,647 என மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டள்ளபோதிலும் உண்மையாக சம்பளம் செலுத்தப்படுகின்றவர்களின் எண்ணிக்கை 25,481 ஆகும். இதன்படி, வருடாந்த வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் இடம்பெறாத 445 இணைந்த சேவை உத்தியோகத்தர்கள் தவிர்ந்த ஏனைய 389 உத்தியோகத்தர்களுக்கான சம்பளம் செலுத்தப்படுவது தொடர்பில் கணக்காய்வின்போது கேள்விகள் எழுப்பப்பட்டன. | அவதானிப்பில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மிகை பதவியணயானது பொது நிர்வாகச் செலவு விடயமான 130 இன் கீழ் வழங்கப்பட்ட ஒதுக்கீடுகளின் கீழ் சம்பளம் செலுத்தப்படுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகும். | மதிப்பீடு சரியாகத் தயாரிக்கப்பட வேண்டும். |